தினகரன்

மார்ச் 6, 2023 திங்கட்கிழமை

# சர்வதேச குழந்தைப்பருவ புற்றுநோய் தின விழிப்புணர்வு நடைபயணம்

புதுச்சேரி, மார்ச் 6: சர்வதேச குழந்தைப்பருவ புற்றுநோய் தினம் ஆண்டுதோறும் பிப்ரவரி 15ம் தேதி அனுசரிக்கப்படுகிறது. குழந்தைப்பருவ புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு ஆதரவை வெளிப்படுத்தவும் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது. புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் உலகில் எங்கு வாழ்ந்தாலும், அவர்களுக்கு சிறந்த சிகிச்சை, கவனிப்பு மற்றும் ஆதரவு கிடைக்கவேண்டும் என்பதே இதன் நோக்கம். இந்நிலையில் புதுச்சேரி ஜிப்மர் புற்றுநோயியல் துறையின் மண்டல புற்றுநோய் மையம் சார்பில் சர்வதேச குழந்தைப்பருவ புற்றுநோய் தினத்தையொட்டி விழிப்புணர்வு நடைபயணம் கடற்கரை சாலையில் நேற்று மாலை நடந்தது.



புதுச்சேரி கடற்கரை காந்தி திடலில் சர்வதேச குழந்தைப்பருவ புற்றுநோய் தினத்தையொட்டி நடந்த பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ஜிப்மர் இயக்குனர் ராகேஷ் அகர்வால் பரிசு வழங்கினார்.

இதில் ஜிப்மர் டாக்டர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள், தன்னார்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து, காந்தி திடலில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் பாடல், நடனம் உள்ளிட்டவை இடம் பெற்றது. நிகழ்ச்சிக்கு ஜிப்மர் புற்றுநோயியல் துறை தலைவர் டாக்டர் ஸ்மிதா கயல் வரவேற்றார். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கு ஜிப்மர் இயக்குனர் டாக்டர் ராகேஷ் அகர்வால் பரிசு வழங்கினார். ஜிப்மர் மருத்துவ கண்காணிப்பாளர் துரைராஜன், டீன் (ஆராய்ச்சி) தப்பா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.